DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: STC.176/2025**
Prosecution witness **PW.6 (LW.3)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Nagaraj | Caste | : | |
| Father Name | : | | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |
| Time | : | | | | |

**(A1 present. A2 absent. Petition under section 355 of BNSS filed through online, allowed. Respective accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **29.10.2025**

**29.10.2025 முதல் விசாரணை** :

நான் மணியாபுரத்தில் குடியிருந்து பிக்கப் வாகன ஓட்டுனராக தொழில் செய்து வருகிறேன். ஆஜர் 1ம் எதிரி கிஷோர் மற்றும் வழக்கின் 2ம் எதிரி நாகராஜ் ஆகியோர்களை எனக்கு தெரியும்.

இன்றிலிருந்து சுமார் 4 அல்லது 5 மாதங்களுக்கு முன்பாக மாலை சுமார் 05.30 மணிக்கு முட்டிநாட்டிலிருந்து சேலாஸ்க்கு பிக்கப் வாகனத்தில் நான் வந்துகொண்டிருந்த போது கெந்தலாவில் போலிசார் என்னை நிறுத்தி விசாரித்தார்கள். என்னிடம் ஒரு கையொப்பம் கேட்டார்கள், நான் செய்து கொடுத்தேன். வழக்கு தொடர்பாக எனக்கு வேறு எதுவும் தெரியாது.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அரசு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ்சாட்சியாக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)**

போலீசார் விசாரணையில் 31.01.2025ம் தேதி பகல் 1 மணிக்கு நான் வீட்டிலிருந்த போது 1 மற்றும் 2 எதிரிகள் எனது வீட்டிற்கு வந்து ஒரு துண்டு

பிரசுரத்தை கொடுத்தார்கள் என்றும், அதில் வரும் 04.02.2025ம் தேதி திருப்பரங்குன்றத்தில் இந்து சமய போராட்டம் நடத்த போவதாகவும் அதில் இந்து மதத்தை சேர்ந்தவர்களை கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்தும், மேலும் இஸ்லாம் மதத்தை சேர்ந்தவர்கள் திருப்பரங்குன்றம் மலையை உரிமை கொண்டாட முயற்சிக்கிறார்கள் என்றும், அங்கு ஆடு, மாடுகளை வெட்டி சமையல் செய்து சாப்பிட போகிறார்கள் என்றும் குறிப்பிட்டு இந்து மக்கள் மற்றும் இஸ்லாமியர்கள் மீது மதரீதியான வெறுப்பையும் பகை உணர்வையும் ஏற்படுத்தும் வகையில் குறிப்பிட்டிருந்தது என்றும் கூறியுள்ளதற்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டு எதிரியை காப்பாற்ற வேண்டி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** – இல்லை.

**மறுவிசாரணை** – இல்லை.